

கனமழை வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருவதின் முன்னேற்றங்கள் குறித்து அரசு அலுவலர்களுனடான ஆலோசனைக் கூட்டம் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் நடைபெற்றது. உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அரசு செயலாளர் இரா. செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாநகர காவல் ஆணையாளர் மகேஸ்வரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.மேயர் சரவணன்,மாநகராட்சி ஆணையாளர்கள் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ்(நெல்லை)சிவ கிருஷ்ணமூர்த்தி (ஈரோடு) உள்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1-7-2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, கடந்த ஆறு ஆண்டுகளாக சைதை வாழ் மக்களின் பிறந்தநாள் விழாக்களில் இதுவரை 1 லட்சத்து 10,000 மரங்களை நட்டு பராமரித்து வரும் ”பசுமை சைதையின் சார்பில் தற்போது மிக்ஜாம் புயலில் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக 5000 மரங்கள் நடும் பணி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நேற்று (21-12-2023) காலை 10 மணிக்கு சைதை தாடண்டர் நகரில் திரைப்பட நடிகர் வைகை புயல் வடிவேலு மற்றும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தர்ராஜன் ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டது.

### அரசின் திட்டங்கள் முழு அளவில் நிறைவேற

# அதிகாரிகளுடன் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து செயல்பட வேண்டும்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, டிச. 22-

சிவகங்கை நகராட்சி சார்பில் தமிழக முதல்வர் அறிவித்துள்ள மக்களுடன் முதல்வர் திட்ட துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. சிவகங்கை கோட்டாட்சியர் திருமதி சுகிதா வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் முதல்வரின் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தினை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

தமிழ்நாடு முதல்வராக தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். இத்திட்டங்களின் முத்தான திட்டமான முதல்வருடன் மக்கள் திட்டத்தை இன்று துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டத்தின் மூலம் மக்களின் குறைகள், பிரச்சினைகள் கேட்கப்பட்டு முப்பது நாட்களில் உடனடியாக தீர்வு காணப்படும். சிவகங்கை நகரில் 27 வார்டுகளுக்கு 5 மையங்களில் இந்த முகாம் நடைபெற்று வருகிறது.

இந்த முகாமில் மனு கொடுத்தவர்கள் மனு மீது நடவடிக்கை எடுப்பதற்காக அனைத்துத் துறை அதிகாரிகளும் இங்கு ஒரே இடத்தில் வந்துள்ளார்கள். இந்த நாளில் மனுக்கள் கொடுப்பதால் பிரச்சினை எளிதில் தீர்க்கப்படும். தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் உடனடியாக தீர்வு காணப்படும். இது ஒரு முத்தாய்ப்பான முதல்வரின் முன்னுரிமையான திட்டம் ஆகும். அரசின் திட்டங்கள் முழுமையாக நிறைவேற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும். அதன் மூலம் இத்திட்டம் முழு அளவில் நிறைவேறும்.

இந்த திட்டத்தின் மூலம் நகராட்சி நிர்வாக துறை, கூட்டுறவு துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை, வருவாய்த்துறை மற்றும் அனைத்துத் துறை அதிகாரிகளும் முகாமிட்டுள்ளார்கள். இந்த வாய்ப்பினை பொது



மக்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், சிவகங்கை நகர்மன்றத் தலைவர் சி.எம். துரை ஆனந்த், காஞ்சி ரங்கால் ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம்.மணி முத்து ஆகியோர் வாழ்த்திப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், நகராட்சி ஆணையர் வேங்கடலட்சுமணன், ஒன்றியச் செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், யோக. கிருஷ்ணகுமார், கவுன்சிலர்கள் மதியழகன், வீனஸ்ராமநாதன், பாக்கியலட்சுமி விஜயக்குமார், ஜெயகாந்தன், மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், நிர்வாகிகள் நகர் மன்ற துணைத் தலைவர் எம்.கார்கண்ணன், மதார், இளைஞரணி அரிகரன், சேகர், அண்ணாமலை மாரி, சேவியர், சோமசுந்தரம் தொ.மு.ச. முருகேசன், ஒன்றியத் துணைச் செயலாளர் முத்துகுமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

நேற்று முன்தினம் ஐந்து இடங்களில் நடைபெற்ற முகாம்களில் 800க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டது. மனுவில் பட்டா மாறுதல், வரி விதிப்பு, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி போன்ற கோரிக்கைகளை மனுவாக கொடுத்தார்கள்.

தாசில்தார் சிவராமன் நன்றி கூறினார்.

### வேளாண் பொருட்களின்

# இறக்குமதி - ஏற்றுமதிக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் என்ன?

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 22

நாட்டில் உள்நாட்டு விவசாய உற்பத்தி தற்போதுள்ள சூழலில் அரிசி, கோதுமை, மைதா, பருப்பு வகைகள், பட்டாணி வகைகள், சமையல் எண்ணெய் மற்றும் பிற மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு ஒன்றிய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து

சீனா உள்ளிட்ட பிற நாடுகளில் இருந்து அரிசி, பருப்பு வகைகள், பட்டாணி மற்றும் பிற மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பொருட்கள் போன்ற அத்தியாவசிய உணவு தானியங்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு ஒன்றிய அரசு கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை விதித்துள்ளதா? என்றும்,

அப்படியானால், உள்நாட்டு விவசாயிகள் மற்றும் பண்ணை தொழிலாளர்க



ளின் நலன்களை உறுதி செய்வதற்காக அத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட அதன் விவரங்கள் மற்றும் அத்தகைய விவசாய பொருட்களின் பட்டியல் யாவை? என்றும்,

நாட்டில் உள்ள விவசாயப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு நிதிப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார பாதுகாப்பை வழங்குவதற்கு ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கைகள் யாவை? மேலும் நாட்டில் விவசாயம் தொடர்பான பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் மாநில வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் வழங்கப்பட்ட நிதி விவரங்கள் விபரம் என்ன?

இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

பெரும்பாலான விவசாயப் பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான வர்த்தகக் கொள்கைகளில் கட்டுப்பாடு ஏதும் விதிக்கப்பட வில்லை. இருப்பினும், தற்போது உள்நாட்டு உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசு சில அத்தியாவசிய உணவு தானியங்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அத்தகைய பொருட்களின் விவரங்கள் குறித்து DGFT எனும் அந்நிய வர்த்தகத்தின் இயக்குநர் ஜெனரல் அலுவலக தரவுகள் இணைப்பு- I- இல் குறிப்பிட்டுள்ளன.

அதன்படி பாசுமதி அரிசி தவிர ஏனைய அரிசி வகைகள், உடைக்கப்பட்ட நொய் அரிசி, கோதுமை, மைதா ஆகிய முக்கிய உணவுப் பொருட்கள் ஏற்றுமதிக்கு தடை போடப்பட்டுள்ளது. அதே நேரம் இவற்றை எஸ்.டி.இ. அரசு வர்த்தக நிறுவனங்கள் மட்டுமே இறக்குமதி செய்ய முடியும். பாசிப்பருப்பு இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கடுகு எண்ணெய் ஏற்றுமதி செய்ய 5 கிலோ டின்களில் அடைக்கப்பட்டு குறைந்த பட்ச ஏற்றுமதி விலையாக டன் ஒன்றுக்கு 900 அமெரிக்க டாலர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு ள்ளது. பச்சைப் பட்டாணி மஞ்சள் பட்டாணி இதர வகை பட்டாணி இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர பொதுவாக இதர உணவுப் பொருட்கள் வர்த்தகத்தில் எந்த நாட்டிற்கும் குறிப்பிட்ட கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அரசு நிறுவனமான ECGC Ltd. ஏற்றுமதிக்கான கடன் அபாயக் காப்பீடு மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்குகிறது.

நாட்டில் விவசாயம் தொடர்பான பல்வேறு நலத் திட்டங்களின் கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் வழங்கப்பட்ட நிதி விவரங்கள், மாநில வாரியாக இணைப்பு--II இல் இணைக்கப்பட்டுள்ளன.

அதன்படி கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு ரூ.5031 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.4176 கோடி வழங்கப்பட்டது. அனைத்து மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.72,380 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.46,636 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.



திருவொற்றியூர் தொகுதியில் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் வரவேற்பில், பள்ளியின் தலைமையாசிரியர் திருமதி.வெற்றிச்செல்வி முன்னிலையில் 149 மாணவர்களுக்கும், 106 மாணவிகளுக்கும் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டியை, மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்வில் கழக தலைமை பொதுக்குழு உறுப்பினரும், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவருமான வி.ராமநாதன், பள்ளி தலைமை ஆசிரியர்கள் வெற்றிச்செல்வி, ஆசிரியர்கள் பாலாஜி, சித்ரா, சாந்தி அகனாஸ், ஆரோக்கிய ஜெய்சீலி, செந்தில் குமார், மாவட்ட பிரதிநிதி பி.எஸ்.சைலேஷ், தொ.மு.ச. கே.தேசிங்கு, எம்.தயாநிதி, வாழப்பாடி செந்தில், ஜே.பி.சந்தானகிருஷ்ணன், எஸ்.எல்லப்பன், நெய்தல் நகர் ஜோதி, இரா.கணேசன், கோபி கிருஷ்ணா, தமிழ் இன்பம் (எ) நிர்மல் தாஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

### ஒகேனக்கல்லை

# சர்வதேச சுற்றுலாத் தலமாக அறிவித்திடுக!

## மக்களவையில் செந்தில்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.22

ஒகேனக்கல் மற்றும் சித்தேரி மலை கிராமத்தை சர்வதேச சுற்றுலாத்தலமாக மாற்ற வேண்டும் என்று தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார் கோரிக்கை விடுத்தார்.

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில் குமார் நாடாளுமன்றத்தில் விதி எண் 377 கீழ் கேட்கப்பட்ட கோரிக்கையில் கூறியிருப்பதாவது:-

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி தமிழ்நாட்டின் நயாகரா என்று குறிப்பிடப்படுகிறது. ஒகேனக்கல்லை சர்வதேச சுற்றுலா தலமாக ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகம் அங்கீகரிக்க வேண்டும் என்று பலமுறை நேரிலும் கடிதம் வாயிலாகவும் முன்மொழிந்துள்ளேன்.

இந்த இயற்கை அதிசயம், அதன் பரந்த காட்சிகளுடன், உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் ஒரு முக்கிய பொழுது போக்கு இடமாக மாறும் திறனைக் கொண்டுள்ளது. ஒகேனக்கல்லை உலகளாவிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தவும், அதன் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் தேவையான நிதியை ஒதுக்குமாறு ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகத்திடம் தற்பொழுது மீண்டும் வலியுறுத்தியுள்ளேன்.

அதேபோல் தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் உள்ள சித்தேரி மலைகளின் பழங்குடி மலைப் பகுதிகளில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் சுற்றுலா விளையாட்டு மற்றும் சாகச விளையாட்டுகளை மேம்படுத்துவதற்கு, முறையான உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுடன் சுற்றுலாத் தலங்களாக செழித்து வளரக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாகவும் அதனால் இந்த கோரிக்கையை பரிசீலிக்க ஒன்றிய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.



மேலும் அதகபாடி, அதியமான்கோட்டை, தடங்கம், பெலஜங்கமனஹள்ளி, ஈச்சம்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய தொழில் பூங்கா அமைக்கப்பட உள்ளது, அதற்கு தேவையான நிலங்களை சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் வழங்கிய அளவுகோல்களின்படி இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேலும் நிலுவையில் உள்ள அனுமதிகளை விரைவுபடுத்தவும், நிதியை ஒதுக்கவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், ஒசூர், பெங்களூர் ஆகிய இடங்களில் இளைஞர்களுக்கு உள்ள வேலைவாய்ப்பை போல் தருமபுரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கும், வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பூவிருந்தவல்லி ஒன்றியம் நெமிலிச்சேரி ஊராட்சியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு அரிசி உள்ளிட்ட நிவாரண தொகுப்புகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ வழங்கினார் அருகில் திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு துணை பெருந்தலைவர் டி.தேசிங்கு, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்ச்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் கே.சுரேஷ்குமார், துணைத் தலைவர் வாசுகி எட்வின் உள்பட பலர் உள்ளனர்.

### வைகை அணையிலிருந்து

# 90 நாட்களுக்கு தண்ணீர் திறப்பு!

தேனி, டிச.22-

பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள ஒருபோக பாசன நிலங்களுக்கும் மற்றும் திருமங்கலம் பிரதானக் கால்வாயின் கீழ் உள்ள ஒரு போக பாசன நிலங்களுக்கும் வைகை அணையிலிருந்து விநாடிக்கு 1130 கன அடி வீதம் 30 நாட்களுக்கு முழுமையாகவும், 60 நாட்களுக்கு முறை வைத்தும் மொத்தம் 90 நாட்களுக்கு 5858 மில்லியன் கன அடி தண்ணீரை 19.12.2023 முதல் வைகை அணையிலிருந்துநீர் இருப்பு மற்றும் நீர்வரத்தைப் பொறுத்து தேவைக்கேற்ப, தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் திண்டுக்கல், மதுரை சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 1,05,002 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சேக் தாவூது**
**டிசம்பர் 22 (1996)**



கல்லூரியில் படிக்கும் போதே தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். மாணவர்கள் சார்பில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தி சிறை சென்றவர்.

பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்தின் மாணவர் அணி இணைச் செயலாளராகவும், நெல்லை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் நெல்லை மாவட்ட மாணவர் அணிச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

1991ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும், அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற ஊழலை எதிர்த்து தளபதி அவர்கள் தலைமையில் நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும் நடத்தியவர்.

“மாணவர் அணியின் கழகக் கண்மணியாக – என் மனங்கவர்ந்த மாணிக்க மணியாக – மாநிலத் துணை அமைப்பாளராக மாணவர் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்திட்ட தியாகச்சுடரே – கள்ளமிலாத் தம்பி! என்றும் என் நினைவில் வாழ்வாய்” என்று தலைவர் கலைஞர் அவர்கள், சேக் தாவூது மறைந்த போது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**